செ.வெ.எண். 66

நாள். 28.03.2017

## புத்திரிக்கை செய்தி

## தேசிய தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம்.

தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் செயல்படுத்துவதன் காரணமாக இந்தியாவில் கடந்த 6 ஆண்டுகளாக தொடர்ந்து போலியோ நோய் தாக்கம் இல்லாமல் உள்ளது வரும் காலங்களிலும் இந்தியாவில் போலியோ நோய் பாதிப்பு இல்லாத உலகம் உருவாக்க தொடர்ச்சியாக தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் 02.04.2017 ஞாயிற்றுகிழமையும் மற்றும் இரண்டாவது தவணை 30.04.2017 ஞாயிற்றுகிழமையும் அன்று நடைபெற உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் வரும் ஜனவரி மாதம் தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் முதல்தவணை 02.04.2017 ஞாயிற்றுகிழமையும் மற்றும் இரண்டாவது தவணை 30.04.2017 ஞாயிற்றுகிழமையும் அன்று வழங்கப்பட உள்ளது.

கிராமபுற பகுதிகளில் 1,496 மையங்களிலும் நகர்புறங்களிலும் 145 மையங்களிலும் பேருந்து நிலையங்களிலும், இரயில் நிலையங்களிலும் , இடம்பெயர்ந்து வாழும் கட்டிடத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் மற்றும் செங்கல் சூளைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் 20 நடமாடும் மருத்துவ குழுக்கள் மூலம் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளன. மேற்கண்ட மையங்களில் 0 முதல் 5 வயதுக்குட்பட்ட சுமார் 2,88,530 குழந்தைகளுக்கு தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் புறவழிச்சாலை, சுங்கச்சாவடிகள், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமணைகள் ஆகியவற்றிலும் முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மையங்களில் மருத்துவத்துறை சார்ந்தவர்கள் 729 பணியாளர்களும் கல்வி துறைச்சார்ந்தவர் 305 பேர்களும் சத்துணவுப் பணியாளர்கள் 3,142 நபர்களும், ரோட்டரி குழுவைச் சார்ந்தவர்கள் 30 பேர்களும், தன்னர்வு தொண்டு நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் 2,255 பேர்களும் மொத்தம் 6,461 பணியாளர்கள் நமது மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து முகாமில் கலந்து பணியாற்றுகின்றனர்.

ஆகவே பொது மக்கள் தாய்மார்கள் அனைவரும் தங்களுடைய 5 –வயதிற்குட்ப்பட்ட குழந்தைகளை அருகில் உள்ள போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்களுக்கு அழைத்துச் சென்று தங்களுடைய குழந்தைகளுக்கு தவறாமல் போலியோ சொட்டு மருந்து பெற்றுக் கொள்ளுமாறும், போலியோ இல்லாத உலகம் படைப்பதற்கு முழு ஒத்துழைப்பு தந்து தேசிய பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் சிறப்பாக செயல்பட மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்கிறார்.

(Signature) 28/3/17

துணை இயக்குநர்
சுகாதாரப்பணிகள்
திருநெல்வேலி

(Signature) 27/3/17

மாவட்ட ஆட்சித்தலைவர்
திருநெல்வேலி

(Signature)